**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | OS | 175 | of | 2021 |
|---|---|---|---|---|

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **கோகிலா** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-02.01.2026**

**வா.சா.-1**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

என் தகப்பனார் பெயர் 1 ம் பிரதிவாதி இராமசந்திரன். என் தாத்தா பெயர் முனுசாமி. முனுசாமியின் அப்பா பெயர் பெரிய சாமி. முனுசாமியின் மனைவி பெயர் அமிர்தம்மாள். முனுசாமி, அமிர்தம்மாளுக்கு 4 ஆண் வாரிசுகள். தாவா சொத்துக்கள் அனைத்தும் மேற்படி முனுசாமி, பெரியசாமி ஆகியோர் சம்பாதித்த சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. முனுசாமி, பெரியசாமி சம்பாதித்த சொத்துக்கள் என்பதை காட்ட ஆவண ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முனுசாமி, அமிர்தம்மாள் இறந்த

பிறகு அவருடைய நேரடி வாரிசுகள் 4 மகன்கள் மட்டுமே என்றால் சரிதான். வா.சா.ஆ.3 01.01.1987 லிருந்து 17.03.2021 வரைக்கானது மட்டுமே என்றால் சரிதான். 01.01.1987 முற்பட்ட காலத்திற்கு வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்திருந்தால் வழக்கு சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியவந்திருக்கும் என்றால் சரிதான். 1முதல் 3 பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்துயுள்ளனர். அந்த எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அவர்கள் சொன்ன அந்த விவரங்களை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரிதான். 25.07.1973, 17.07.1973 ஆகிய தேதியிட்ட ஆவணங்கள் முன்னிலைக்கு சொத்துக்களை அமிர்தம்மாள் 3ம் தரப்பினரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்ற விவரம் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவண எண்ணுடன் குறிப்பிடப்பட்டுள்ள கிரய பத்திரங்களின் பதிவு நகல்களை நான் வாங்கி பார்க்கவில்லை. அமிர்தம்மாள் கிரயம் வாங்கியிருந்தார் அதில் அவருடைய 4 மகன்களுக்கு மட்டுமே சொத்தில் பாத்தியதை உண்டு என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்துக்கள் அமிர்தம்மாள் சம்பாதித்தவை அல்ல. மொத்தம் உள்ள 4 மகன்களில் மூவரும் 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டனர் என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ.2 முன்னிலைக்கு சொத்துக்கள் முழுவதும் 1ம்பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்களாக ஆகிவிட்டன என்றால் சரியல்ல. நானோ,

4 ம்பிரதிவாதியோ  தாவா சொத்து மூதாதையர் சொத்து என்று பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முன்னிலைக்கு 1 ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளுக்கு சொத்தை செட்டில்மண்ட் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.   வா.சா.ஆ.1 ஆவணம் நடைமுறைக்கு வந்து 2,3 பிரதிவாதிகள் சொத்தின் அனுபோகத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.  தாவா சொத்திற்கான பட்டா  2015 லியே 2,3 பிரதிவாதிகளுக்கு மாறிவிட்டது என்றால்  அது தெரியும். எனவேதான் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.  தாவா சொத்துக்கள் இன்றைய தேதி வரை 2,3 பிரதிவாதிகளிடம்தான் உள்ளன என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 1 ம்பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல.  நீதிமன்ற கட்டணம் குறைத்து கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கூட்டு அனுபோகத்தில் உள்ளதாக பொய்யாக சொல்லி குறைவான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே நானோ, 4 ம் பிரதிவாதியோ பாகம் கோரமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை- ஏவுரை இல்லாததால் தள்ளி வைக்கப்படுகிறது.

T
CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu